ஆகவே இந்த அவை உறுப்பினரை அல்லது அரசாங்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும் என்று இப்படிச் சொல்வது சரியல்ல. காமராஜ் நாடார் அவர்களுக்கு ரொம்ப வேண்டியவர் என்று சொல்லப்படுகின்ற தாமஸ் என்பவருக்கு . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : சர்க்காரைக் களங்கப்படுத்தக் கூடாது என்று சொல்லி இவர்கள் மட்டும் காமராஜ் அவர்களை களங்கப்படுத்தலாமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணாமலை மன்றத்திற்கு எதிராக ஃபோர்ட் ஸ்டேஷன் பக்கத்தில் ரூ. 1,898 வருட வாடகைக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவறு என்று சொல்லவில்லை. ஆகவே, நாங்கள் ஒன்றும் முறைக்கேடாகச் செய்து விடவில்லை என்று கூறி இந்த அறிக்கையை ஆதரித்த எல்லா உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் கூறிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

(6) 1970-71-ம் ஆண்டின் முன்பண நிதிக் கோரிக்கைகள் (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது 1970-71-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, ஆளுநருடைய பரிந்துரையின்மேல், 1970-71-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளின் அறிக்கையில் 1 முதல் 47 மானியக் கோரிக்கைகளுக்கெதிராகக் கீழ்க்கண்டபடி காட்டியுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று தொடங்கும் நிதியாண்டின் ஒரு பகுதி குறித்து அரசுக் கணக்கில் வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

			ரூபாய்
கோரிக்கை	1	நிலவரித் துறை	52,00,000
ஷை	2	மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.	9,00,000
ஷை	3	பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் ..	45,00,000
ஷை	4	முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் ..	7,00,000
ஷை	5	பத்திரப் பதிவுத் துறை	23,00,000
ஷை	6	மாநிலச் சட்டமன்றம்	6,00,000
ஷை	7	தேர்தல்கள்	2,00,000
ஷை	8	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	1,14,00,000
ஷை	8-எ	பால்வழங்கு திட்டங்கள்	97,00,000
ஷை	9	மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் ..	3,89,00,000
ஷை	9-எ	1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்	10,00,000

1970 மார்ச் 7]

			ரூபாய்.
கோரிக்கை	10	நீதி நிர்வாகம்	60,00,000
ஷை	11	சிறைச்சாலைகள்	59,00,000
ஷை	12	காவல் துறை	3,62,00,000
ஷை	13	கல்வி	16,93,00,000
ஷை	14	மருத்துவம்	3,99,00,000
ஷை	15	பொதுச் சுகாதாரம்	2,25,00,000
ஷை	16	வேளாண்மை	4,00,00,000
ஷை	17	மீனளம்	44,00,000
ஷை	18	கால்நடை வளர்ப்பு	96,00,000
ஷை	19	கூட்டுறவு	1,00,00,000
ஷை	20	தொழில்கள்	96,00,000
ஷை	21	சின்கோனா	14,00,000
ஷை	22	கதர்	4,00,000
ஷை	23	சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன	1,51,00,000
ஷை	24	தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் ..	20,00,000
ஷை	25	பழங்குடி மக்கள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்	2,21,00,000
ஷை	26	பாசனம்	94,00,000
ஷை	27	பொதுப் பணிகள்—பணிகள் ..	2,55,00,000
ஷை	28	பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும் ..	1,09,00,000
ஷை	29	பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் ..	75,00,000
ஷை	30	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் ..	4,88,00,000
ஷை	31	பஞ்சத் தணிப்பு	4,00,000
ஷை	32	ஓய்வூதியங்கள்	1,08,00,000
ஷை	33	பல்வகை	2,08,00,000
ஷை	34	எழுதுபொருள்—அச்சுத்துறை ..	69,00,000
ஷை	35	காட்டுவளத் துறை	49,00,000
ஷை	36	ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	2,23,00,000
ஷை	37	ஜமீன்தார்களுக்கு இழப்பீடு	19,00,000
ஷை	38	பொதுச் சுகாதார மூலதனச் செலவு ..	11,00,000
ஷை	39	வேளாண்மை மூலதனச் செலவு ..	5,00,000
ஷை	40	தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு	2,17,00,000
ஷை	41	பாசன மூலதனச் செலவு	2,13,00,000
ஷை	42	பொதுப் பணிகள் மூலதனச் செலவு ..	3,00,00,000
ஷை	43	சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.	75,00,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

			ரூபாய்.
கோரிக்கை	44	காட்டுவள மூலதனச் செலவு	35,00,000
ஷை	45	ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.	2,00,000
ஷை	46	அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.	14,25,00,000
ஷை	47	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	5,89,00,000

மேற்கண்ட கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

(7) அறிவிப்பு.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த மன்றத்தின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

The Hon. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduced the bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

எதுவும் இல்லை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 JUN 1971